**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 409/2024**

**Prosecution Witness : 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. வெங்கடாசலபதி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. வரதராஜன்** | **Calling** | : | **காவல் ஆய்வாளர், திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையம்** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **55** |
| | | | **Dated** | : | **16.04.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

கூடுதல் சாட்சி, **திரு. வெங்கடாசலபதி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு அசா. 8 ஆக விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் ஆய்வாளர் திரு. கண்ணன் அவர்களை எனக்கு நன்கு தெரியும். அவருடைய கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சையம். அவர் தற்போது வேறு மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறார். இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான அசா. 2 முதல் அசா. 5 வரை உள்ளவர்கள் பிறழ் சாட்சிகளாக இருப்பதால், வழக்கின் காலதாமத்தை தவிற்கும் பொருட்டு வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம்

அளிக்கிறேன். சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. குமார் அவர்கள் கடந்த 14.12.2023ம் தேதி 13.45 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, சிவபாலன் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று, நிலைய குற்ற எண். 835/2023, சட்டப்பிரிவுகள் 279, 337 இ.த.சவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் மனோகரன் பார்வைக்கு வைத்துள்ளார். அவர் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு முதல் விசாரணை மேற்கொண்ட நிலையில் விபத்தில் காயம்பட்ட ராஜூ என்பவர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டபடியால், வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.சவில் இருந்து, சட்டப்பிரிவை 279, 304(A) இ.த.ச.வாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். வழக்கை மேல் விசாரணை செய்வதற்காக ஆய்வாளர் திரு. கண்ணன் அவர்களின் பார்வைக்கு வழக்கு கோப்பை ஒப்படைத்துள்ளார். ஆய்வாளர் அவர்கள் 15.12.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு திண்டுக்கல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக சென்று, விபத்தில் இறந்துபோன ராஜூ என்பவரின் பிரேதத்தின்மீது பகல் 10.00 மணி முதல் 12.00 மணி வரை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு, பிரேத விசாரணை அறிக்கை மேற்கொண்டுள்ளார். **மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கின் வாதியான சிவபாலன் என்பவரை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிரேத விசாரணை சாட்சிகளான தனபாலன், அழகர்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 57 BP 8960 எமஹா இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பியுள்ளாார். மோட்டார்

வாகன ஆய்வாளர் திரு. இளங்கோ என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, மேற்படி வாகனத்திற்கு மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. விபத்தில் காயம்பட்ட ராஜூ என்பவருக்கு முதலுதவி சிகிச்சை செய்த திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி. நிஷா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றுள்ளார். மேற்படி விபத்து பதிவேடு **அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. விபத்தில் காயம்பபட்ட நபர் மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்தபோது, அவர் இறந்துவிட்டபடியால் இறப்பு தகவலை உறுதி செய்த மருத்துவர் திரு. தீபக் சங்கர் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்தில் காயம்பட்டு இறந்துபோன ராஜூ என்பவரின் பிரேத்தை பிரேத கூறாய்வு மேற்கொள்வதற்காக முதல்நிலை காவலர் திரு. பாண்டியன் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி பிரேத கூறாய்வு மேற்கொண்ட திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. அகமது சேக் என்வரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி பிரேத கூறாய்வு அறிக்கை **அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கின் எதிரியை 19.12.2023 ம் தேதி 11.30 மணிக்கு நிலையம் முன்பாக காரணம் கூறி கைது செய்து, பின்னர் தக்க பிணையில் விடுவித்துள்ளார். வாதியிடம் புகார் மனுவைப்பெற்று வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. குமார் அவர்களையும், பிரேத கூறாய்விற்காக வேண்டுகோள் கடிதம் எடுத்துச் சென்ற முதல்நிலை காவலர் திரு. பாண்டியன் என்பவரையும், முதல் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் மனோகரன் என்பவரையும் தனித்தனியாக விசாரணை

செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் சாட்சிகளை விசாரை செய்து, அவருடைய புலன் விசாரணையை முடித்துக் கொண்டு வழக்கின் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) இ.த.ச.வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்னது போன்று, சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் அசா. 1 புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் மனு பின்னிட்டு வழக்கிற்காக தயாரிக்கப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னது போன்று சாட்சிகள் 161 குவிமுச வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னது போன்று சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில், எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றும், அதேபோல எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பொய்யாக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து எதிரியின் கவனக்குறைவினால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 16.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.04.16 16:18:47 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.